**உலக ஆயுர்வேத தினம் - 2024**

**சுதேச மருத்துவ பீடத்தினால் ஏற்பாடு செய்யப்பட்ட பீடங்களுக்கிடையேயான விவாதப் போட்டி**

**கொழும்பு பல்கலைக்கழகம்**

**விதிமுறைகள் மற்றும் வழிகாட்டுதல்கள்**

1. தற்போது கொழும்பு பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீடத்தில் கல்வி கற்கும் மாணவர்களுக்கும் அல்லது கம்பஹா விக்கிரமாராச்சி சுதேச மருத்துவப் பல்கலைக்கழகத்தின் சுதேச மருத்துவ பீட மாணவர்களுக்கும் மட்டுமே திறக்கப்பட்டுள்ளது. அத்துடன் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் அல்லது கிழக்குப் பல்கலைக்கழகத்தின் சித்த மருத்துவ பீட மாணவர்களும் போட்டியில் பங்குகொள்ளலாம். மேலே உள்ள பீடங்களில் 15.09.2024 ஆம் திகதிக்குள் பதிவு செய்து ஏதேனும் ஒரு கல்வி ஆண்டில் கல்வி கற்கும் எந்த மாணவரும் விண்ணப்பிக்கலாம்.

2. ஒவ்வொரு அணியும் ஐந்து உறுப்பினர்களைக் கொண்டிருக்க வேண்டும். (நான்கு குழு உறுப்பினர்கள் மற்றும் ஒரு இருப்பு உறுப்பினர்)

3. ஒரு மாணவர் ஒரு குழுவை மட்டுமே பிரதிநிதித்துவப்படுத்தலாம்.

4. ஒரு குழு ஒரே கல்வியாண்டில் கற்கும் அல்லது வெவ்வேறு கல்வியாண்டுகளில் கற்கும் மாணவர்களைக் கொண்டிருக்கலாம்.

5. அனைத்து குழுக்களும் 25.09.2024 அன்று பி.ப 4:00 மணிக்கு முன்பு புழழபடந குழசஅ ஐ பூர்த்தி செய்ய வேண்டும் மேலதிகமாக, விண்ணப்பத்தில், பொருத்தமான குழுவின் பெயர் (மூன்று வார்த்தைகளுக்கு மேற்படாமல்) குழுவை அடையாளம் காண வழங்கப்பட வேண்டும். விண்ணப்ப Google form இணைப்பு: https://docs.google.com/forms/d/e/1FAIpQLSdAb_a5-bRoJKF1-C-DmnCmUoTMQi5eL1FCuCwIsUkbZkTdIg/viewform?usp=sf_link

6. மொழி மூலம்: சிங்களம் அல்லது தமிழ் அல்லது ஆங்கிலம். மொழி மூலத்தின் அடிப்படையில் மூன்று தனித்தனி விவாதப் போட்டிகள் நடத்தப்படும்.

7. ஆதரிப்பவர் மற்றும் எதிர்ப்பவர் நிலைகளுக்கான தலைப்பு தீர்மானிக்கப்படும் மற்றும் போட்டிக்கு முன்னதாக நடைபெறும் கூட்டத்தில் இது பற்றி தெரிவிக்கப்படும்.

8. போட்டி நாக் அவுட் முறையைப் பின்பற்றும், மேலும் தேவையேற்பட்டால் சிறந்த தோல்வியடைந்த அணிகள் நடுவர் குழாமின் முடிவின் அடிப்படையில், அடுத்த சுற்றுகளுக்குத் தேர்ந்தெடுக்கப்படும்.

9. போட்டியின் திகதி, சுற்றுகளின் எண்ணிக்கை மற்றும் முறை என்பன அணிகளின் எண்ணிக்கையின் அடிப்படையில் முடிவு செய்யப்படும்.

10. ஆரம்ப சுற்றுகளில், ஒரு அணியின் ஒவ்வொரு பேச்சாளருக்கும் பேச்சுக்கு 03 நிமிட நேரம் ஒதுக்கப்படும், அணித் தலைவரின் எதிர்ப் பேச்சுக்கு 04 நிமிடங்கள் ஒதுக்கப்படும்.

11. ஏற்றுக்கொள்ளப்பட்ட புள்ளிகள் திட்டத்தின் படி புள்ளிகள் வழங்கப்படும்.

12. நடுவர் குழாமின் முடிவே இறுதியானது.

13. வெற்றி பெற்ற மற்றும் இரண்டாம் இடம் பெறும் அணிகளுக்கு பரிசுகள் மற்றும் சான்றிதழ்கள் வழங்கப்படும். போட்டியின் சிறந்த விவாதிப்பவர் மற்றும் சுற்றின் சிறந்த விவாதிப்பவர் தேர்ந்தெடுக்கப்படுவார்கள்.

நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர்கள்:


Dr P A S N Silva - 0772653123

Dr M M M Nifras –077 304 8885

Dr SAKCS Senanayake - 0719334584

Dr J S Anusara – 0717958205

Dr S M K S Ranasinghe – 0711342465